தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு

# 2011

# தமிழ்மொழி

## வகுப்புநிலை 3

நேரம்: 90 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தரப்பட்டுள்ள சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

எ+கா: அறநெறி நூல்களுள் **திருக்குறள்** ஒன்றாகும்.
(மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள்)

1. கோடைகாலத்தில் மரங்கள் ________________ காட்சி அளிக்கும்.
   ( காய்ந்து, பசுமையாகக், கறுத்துக் )

2. மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படும் நாள் ________________
   ( தை முதல் நாள், தை கடைசி நாள், தை இரண்டாம் நாள்)

3. சிறுமி ________________ எனச் சிரித்தாள்.
   ( கலகல, சலசல, குழுகுழு )

4. பெரியார் தமிழர் ________________ வாழவேண்டும் என்று வலியுறுத்தினார்.
   ( தன்மானத்துடன், தன்னலத்துடன், தலைகுனிந்து )

5. வீரம்செறிந்த வன்னியின் கடைசி மன்னன் ________________
   ( பண்டாரவன்னியன், சங்கிலியன், அதியமான் )

6. அக்கா ________________ படம் அழகாக இருந்தது.
   ( வரைந்த, படித்த, செய்த )

7. தகடூரை ________________ என்ற மன்னன் ஆண்டான்.
   ( சங்கிலியன், அதியமான், சேரன்செங்குட்டுவன் )

8. குளிர் என்றசொல்லின் எதிர்ப்பொருள் ________________ என்பதாகும்.
   ( குளிர்மை, சூடு, பசுமை )

9. நாங்கள் நேற்று விளையாடினோம். நாங்கள் நாளை

________________________

( விளையாடுகிறேன், விளையாடுவோம், விளையாடுகின்றோம் )

10. நாம் ________________________ உணவை உண்ண வேண்டும்.
( இனிமையான, சத்துள்ள, சுவையான )

11. பண்டாரவன்னியன் ________________________ என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்டான்.
( கதிர்காமநாயகம், ஆங்கிலேயர், சங்கிலியன் )

12. 'பொன் பூச்சொரியும்' என்ற பாடலைப் பாடிய புலவர்

________________________.

( ஔவையார், பாரதியார், சின்னத்தம்பிப்புலவர் )

13. குற்றாலீசுவரன் ________________ வயதில் பாக்கு நீரிணையைக் கடந்தான்.
( ஏழு, பன்னிரண்டு, பத்து )

14. நரிப்பாட்டி என்ற கதையில் வரும் சிறுமியின் பையில் இருந்தவை

____________________

( விளையாட்டுப்பொருட்கள், உணவுப்பண்டங்கள், நூல்கள் )

15. 70 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் வருவது ________________.
( எலுபது, எளுபது, எழுபது )

16. அதியமான் என்ற மன்னன் காட்டில் கண்ட மரத்தின் பெயர்

________________.

( வாழை, கருநெல்லி, பலா )

17. தொலை நோக்கியைக் கண்டு பிடித்தவர் ______________________
( மார்க்கோனி, ரைட்சகோதரர்கள், கலிலியோ )

18. பனிகாலத்தில் மரங்கள், மலைகள் ______________________
மூடப்பட்டு அழகாகத் தோன்றும்.
( மழையால், பூம்பனியால், இலையால் )

19. மாடு புல் மேய்ந்தது. மாடுகள் புல் ______________________.
( மேய்ந்தன, மேய்ந்தது, மேய்ந்தவை )

20. இயல், இசை, நாடகம் என்பன ______________________.
( முக்கனி, முப்பால், முத்தமிழ் )

(புள்ளிகள் 20)

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| மளமள | சலசல | கணீர்கணீர் |
| படபட | ~~குடுகுடு~~ | பாய்ந்து பாய்ந்து |

எ+கா: பாட்டி __குடுகுடு__ என நடந்து சென்றார்.

1. முயல் ______________________ ஓடியது.
2. ஆலயமணி ______________________ என ஒலித்தது.
3. குயிலி வீட்டு வேலையை ______________ எனச் செய்து முடித்தாள்.
4. ஆற்று நீர் ______________________ என ஓடியது.
5. ஓடிய சிறுவனின் இதயம் ______________________ என அடித்தது.

(புள்ளிகள் 05)

3) பார்த்து, உறுப்பமைய எழுதுக.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

______________________________________________

(புள்ளிகள் 05)

4) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மதித்து | ~~பழுத்த~~ | விளைந்த | இரக்க | எழுதிய | நெருங்கிய |

எ+கா: கிளி பழுத்த பழத்தைக் கொத்தித் தின்றது.

1. அண்ணா ______________ கடிதத்தை நான் வாசித்தேன்.
2. வேழனும் இலக்கியனும் ______________ நண்பர்கள்.
3. உழவர்கள் ______________ நெல்லை அறுவடை செய்தனர்.
4. பாரி ______________ குணம் உள்ளவன்.
5. நாம் பெரியோரை ______________ நடப்போம்.

(புள்ளிகள் 05)

## 5) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, வாக்கியங்களை நிறைவு செய்க.

எ+கா: மாறன் மீன் பிடிக்கச்

**சென்றான்**.

1. கோதை நேற்றுப் பள்ளிக்குச் சென்று பாடம்

 ______________________________.

2. பாரி மன்னன் முல்லைக்கொடிக்கு தேரைக்

 ______________________________.

3. பண்டாரவன்னியனைக் கதிர்காமநாயகம் காட்டிக்

 ______________________________.

4. நேற்று பாவலனால் நாடகம்

 ______________________________.

5. போர்த்துக்கேயர் சங்கிலியனைச் சிறைப்

 ______________________________.

(புள்ளிகள் 10)

6) கட்டங்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதி, சொற்களைக் கண்டறிந்து நிரற்படுத்துக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ன | டா | கு | | நா | |
| ழு | இ | | தி | யா | | த |
| தை | த் | சு | | | ப | மி |
| | தா | வீ | நோ | க | ன் | ழீ |
| | | ட | | ர | | |
| | | | வே | | | ம் |

| நாடுகள் | விலங்குகள் |
|---|---|
| எ+கா: கனடா | கழுதை |
| 1. ________ | 1. ________ |
| 2. ________ | 2. ________ |
| 3. ________ | 3. ________ |
| 4. ________ | 4. ________ |
| 5. ________ | 5. ________ |

(புள்ளிகள் 10)

## 7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| தங்கத்தாத்தா | பாடல்கள் | ~~இலங்கையில்~~ |
| மிகவும் | ஆடிக்கூழ் | தமிழ்ப் |

சோமசுந்தரப் புலவர் **இலங்கையில்** வாழ்ந்த ஒரு

____________ புலவர். அவர் சிறுவர்களுக்கான

____________ பலவற்றை எழுதினார். அவை

____________ இனிமையானவை, எல்லோருடைய

மனதையும் எளிதில் கவரக் கூடியவை, அவற்றுள் பவளக்கொடி

கத்தரித்தோட்டத்துக் காவலன், ____________ என்பன

சிலவாகும். இவரைத் ____________ எனவும்

அழைப்பர்.

(புள்ளிகள் 10)

## 8) கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தைப்பொங்கல் தமிழரது திருநாள். தைப்பொங்கல் தை முதலாம் நாள் கொண்டாடப்படும். இதை உழவர் திருநாள் என்றும் கூறுவர். பொங்கலன்று முற்றத்தில் கோலம் போடுவர். மாவிலை, தோரணம் கரும்பு கட்டுவர். புதுப்பானையில் பொங்கல் பொங்குவர். இனிப்புக்காகத் தேனும் சர்க்கரையும் சேர்ப்பர். பொங்கல் பொங்கி வரும் போது 'பொங்கலோ பொங்கல்' என்று கூறுவர். பொங்கலுடன் முக்கனிகளும் சேர்த்து கதிரவனுக்குப் படைப்பர். இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலைக் கொண்டாடி மகிழ்வர்.

எ+கா: தைப்பொங்கல் யாருடைய திருநாள்?

**தைப்பொங்கல் தமிழருடைய திருநாள்.**

1. தைப்பொங்கல் எப்போது கொண்டாடப்படும்?

_______________________________________________

2. தைப்பொங்கலை வேறு எப்படிக் கூறுவர் ?

_______________________________________________

3. தைப்பொங்கலன்று எங்கே கோலம் போடுவர் ?

_______________________________________________

4. கதிரவனுக்குப் பொங்கலோடு எவற்றைச் சேர்த்துப் படைப்பர் ?

_______________________________________________

5. எப்போது மாட்டுப் பொங்கலைக் கொண்டாடுவர் ?

_______________________________________________

(புள்ளிகள் 10)

## 9) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

எ+கா: வீடு / நாங்கள் / கட்டினோம் / புதிய

**நாங்கள் புதிய வீடு கட்டினோம்.**

1. ஔவையார் / பெண் / புலவர் / சிறந்த

   ---------------------------------------------------------------------------.

2. இருந்தது / பாடல் / எழிலி / சிறப்பாக / பாடிய

   ---------------------------------------------------------------------------.

3. பழந்தமிழ்க் / பேணுவோம் / கலைகளைப் / நாம்

   ---------------------------------------------------------------------------.

4. போற்றுவோம் / நடுகற்களைப் / நாங்கள் / மாவீரர்களின்


   ---------------------------------------------------------------------------.

5. மோசிகீரனாரின் / தமிழ் / காப்பாற்றியது / உயிரைத்

   ---------------------------------------------------------------------------

(புள்ளிகள் 10)

## 10) படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



(புள்ளிகள் 15)